கதர் மலர் பிரசுரம்

மகாத்மா மறைந்தார்!

வினோபா பாவே

ACL-TNAL 00808

அகில பாரத சர்க்கா சங்கம்
தமிழ் நாட்டுக் கிளை
திருப்பூர்

முதற் பதிப்பு மே 1948

ருG
N48

விலை 0–8–0

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
13673

Printed at KABEER PRINTING WORKS, Madras, 5.

முன்னுரை

சென்ற ஜனவரி மீ 30௳ நேர்ந்த மகாத்மாஜியின் மரணத்தினல் உண்டானது போன்ற அதிர்ச்சி அதற்குமுன் உண்டானதில்லை. விவரம் தெரிந்த காலம் தொட்டே அவர் வகுத்த பாதையில் தம் சக்திக்கு உகந்த வகையில் நடக்க முயன்றவர்களுக்கு அன்று மாலையில், "இனி நமக்கு விடிவு ஏது?", "செய்தி உண்மைதானு?", "காந்திஜிக்கும் காலனு?", "அவர் இல்லாத உலகில் வாழ்வா?", "அவர் ஏன் மறைய வேண்டும்?", "இனிச் செய்ய வேண்டியது என்ன?" என்பது போன்ற எத்தனையோ கேள்விகள் மனத்தில் எழுந்து குழப்பின.

சாதாரண மக்கள் நிலையே இவ்வாறிருக்க அவருடன் நீண்ட காலமாக நெருங்கிப் பழகியவர்களைப் பற்றி என் சொல்வது? அதிலும் ஸேவா கிராம—வர்த்தாவின் கையறு நிலையை விவரிக்க முடியுமா? "ராமனில்லாத அயோத்தி" என்ருல் அதற்கே பொருந்தும். ராமனுவது 14 வருஷம் கழிந்தபின் திரும்புவானென்ற நம்பிக்கை யிருந்தது. ஆனல் மகாத்மாவோ?

இத்தகைய இருள்மயமான சூழ்நிலையில் ஆண்டவனை வேண்டுவதைத் தவிர வேறு வழியேது? சேவாகிராம—வர்த்தா வாசிகள் ஆண்டவனையே வேண்டினர்; தினமும் வேண்டினர்; தொடர்ந்து 13 தினங்கள் வேண்டினர்.

ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையின் இறுதியில் ஆசார்ய விநோபாஜி நேர்ந்துவிட்ட நிகழ்ச்சியின் உட்கருத்தையும் நம் முன்னுள்ள கடமைகளையும் விளக்கி உபதேசித்து வந்தார். இவ்வாறு அவர் அளித்த 14 உபதேசங்களின் தொகுப்பே இச் சிறு நூல்.

ஸர்தார் வல்லபாய் வெகு முக்கியமான விஷயமொன்றைக் குறிப்பிட்டார். காந்திஜியின் முகத்தில் தயையும் மன்னிப்பும்—அதாவது குற்றவாளியின் விஷயத்தில் மன்னிப்பும்—காணப்பட்டதாம். பின்னர், 'இப்பொழுது எவ்வளவு துக்கம் உண்டானபோதிலும், ஆத்திரத்திற்கு இடம் கொடுத்தல் ஆகாது; ஆத்திரம் மூண்டாலும் அதை அடக்க வேண்டும். காந்திஜி நமக்கு அளித்த போதனையை அவர் உயிர்வாழ்ந்த நாளில் நம்மால் அனுஷ்டிக்க இயலவில்லை; இப்பொழுது, அவர் இறந்த பிறகாவது அனுசரிப்போமாக' என்றார்.

இதையொத்த சம்பவமே இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு முதுமைப் பிராயம் வந்துவிட்டது. ஆயுள் முழுமையும் உழைத்து உழைத்துக் களைத்திருந்தார். காந்திஜியைப் போலவே அவர் மக்களுக்கு இடையறாது ஊழியம் புரிந்திருந்தார். களைப்பு மேலீட்டால் அவர் ஒரு சமயம் காட்டிடையே ஒரு மரத்தடியில் படுத்துக் கண் அயர்ந்து விட்டார். அப்பொழுது ஒரு வேடன் அக்காட்டில் புகுந்தான். அவனுக்கு மானென்று மரத்தை யொட்டிப் படுத்திருப்பது போல் தோன்றிற்று. வேடுவன்தானே! குறி பார்த்து அம்பை எய்தான். அம்பு பகவானுடைய திருவடியில் தைக்கவே ரத்தப் பெருக்கெடுத்தோடிற்று. வேடன் தான் கொன்ற மிருகத்தைக் கைப்பற்றக் கருதி அருகணைந்தான். அங்கே காயமுற்றுக் கிடக்கும் பகவானைக் கண்டான். அவனுக்கு மிக்க துக்கமுண்டாயிற்று. மாபெரும் பாதகம் தன் கையால் விளைந்ததை யெண்ணி மனம் நொந்தான்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் சிறிது நேரத்தில் உயிர் நீத்தார். ஆனால் இறக்குமுன் அவர் வேடனைப்பார்த்து, "வேடா, அஞ்சவேண்டாம். மரணத்திற்கு ஏதேனும் ஒரு காரணம் வேண்டுமல்லவா? நீ காரண மானாய்" என்று கூறி ஆசி அளித்தார்.

அதேபோன்ற நிகழ்ச்சி ஐயாயிரம் வருஷங்கள் கழிந்த பின் மீண்டும் நடந்திருக்கிறது. சாதாரணமாகப் பார்க்கையில், அந்த வேடன் அறியாமையால் அம்பை எய்திருக்க, இந்த வாலிபன் நன்கு ஆலோசனை செய்தபின், காந்திஜியைக் குறிவைத்துச் சுட்டானே என்று தோன்றும். இந்தக் காரியத்திற்கென்றே இவன் டில்லி சென்றவன். இவன் டில்லிவாசி அல்ல. காந்திஜி பிரார்த்தனைக்குப் போய்க்கொண்டிருக்கையில் இவன் அவரை அணுகி மிகவும் அண்மையிலிருந்து குண்டுகளைப் பொழிந்தான். இவனுக்கு காந்திஜியைத் தெரியும்போல் தோன்றுகிறது. ஆனால் உண்மை அவ்வாறல்ல. அறியாத அவ்வேடனைப் போல் இவனும் அறியாதவனே. காந்திஜி ஹிந்து மதத்திற்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கிறார் என்று கருதிய இவன் அவரைச் சுட்டுவிட்டான். ஆனால் இன்று உலகத்தில் எவரையேனும் ஹிந்து மதத்தை ஒளிபெற்று விளங்கச் செய்திருக்கிறார் என்று சொல்வதானால் காந்திஜியையே சொல்லவேண்டும். முந்தாநாள்தான் அவர், "ஹிந்து மதத்தைக் காக்கவேண்டி மனிதனெவனையேனும் நியமிக்கும் திருவுள்ளம் கடவுளுக்குண்டானால், அவர் அப்பணிக்கு என்னையே அமர்த்துவார்" என்று கூறினார். அவருக்கு இவ்வளவு தன்னம்பிக்கை இருந்தது. தமக்கு

உண்மையென்று தோன்றியதை அவர் ஒளிவு மறைவின்றி வெளியிட்டு வந்தார். பெரிய மனிதர்கள் தம் பாதுகாப்பின் பொருட்டு மெய்க்காப்பாளரை வைத்துக் கொள்வதுண்டு. காந்திஜியோ இத்தகைய காப்பாளரை என்றும் வைத்திருந்ததில்லை. அவர் உடலை ஒரு பொருட்டாகவே மதித்தவரல்ல. உடலைத் தாங்கியிருந்தும், உடலற்றவரைப் போலவே அவர் வாழ்ந்தார். அஞ்சாமை அவர் ஏற்றிருந்த விரதமாகும். கொடும் படையும் அடியெடுத்து முன்னேறத் தயங்கும் இடத்திற்குத் தனியராய்ச் செல்ல அவர் ஆயத்தமாயிருந்தார்.

எது உண்மையோ, எதனல் மக்களுக்கு நன்மையுண்டோ, அதையே சொல்வது அவருடைய வழக்கம். அது எவருக்கேனும் பிடித்தாலும் சரி, பிடியாவிட்டாலும் சரி, அதனல் விளையும்பயன் எவ்வாறு இருப்பினும் ஒன்றே. "மரணத்திற்கு அஞ்சத் தேவையே இல்லை; ஏனெனில் நாம் அனைவரும் இருப்பது கடவுளின் கையில். நமது ஊழியத்தைப் பெறுவதற்கு அவனுக்கு விருப்பமுள்ளவரையில், அவன் நம்மை வைத்திருந்து, அழைத்துக்கொள்ள விரும்பியவுடனே அழைத்துக் கொள்வான். ஆகவே நமக்கு உண்மையென்று தோன்றுவதைச் சொல்வதே நம் கடமை. அத்தகைய சமயத்தில் நான் ஒருவனே எஞ்ச உலகமே என்னை எதிர்த்து நின்றபோதிலும், எனக்கு உண்மையென்று தோன்றுவதை நான் சொல்லியே தீரவேண்டும்" என்று அவர் சொல்வதுண்டு. அச்சமென்பதையே அறியாத இத்தகைய போக்கு அவருடையது. அவருடைய மரணமும் எந்த சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தது !!

அவர் பிரார்த்தனைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அதாவது அந்த நேரத்தில் அவருடைய உள்ளத்தில் கடவுளைத் தவிர வேறெந்த எண்ணமும் இல்லை. அவருடைய வாழ்க்கை அனைத்துமே சேவை, பரோபகாரம் ஆகியவற்றால் அமைந்திருந்ததைக் கண்டோம். ஆயினும் பிரார்த்தனை புரியவிருக்கும் உள்ளமும், பிரார்த்தனை நேரமும் மிக்வும் புனிதமானவையென்று கூறவேண்டும். அரசியல் முதலிய எத்தனையோ பெரிய விஷயங்களில் அவர் ஈடுபட்டிருந்தார். ஆனால் அவரது பிரார்த்தனை நேரங்கள் மட்டும் என்றும் தவறியதில்லை. இத்தகைய பிரார்த்தனை நேரத்திலேயே உடலிலிருந்து விடுவிக்கவேண்டி கடவுள் ஆளை அனுப்பினர் போலும். தம் பணியை ஆற்றிக்கொண்டிருக்கையிலேயே தமக்கு மரணம் நேர்ந்ததால் விளைந்த மகிழ்ச்சியும், அதற்குக் காரணாய் அமைந்த குற்றவாளியிடம் கருணையும் என—இருவகைக் கருத்துக்கள் இறக்கும் தறுவாயில் அவருடைய முகத்தில் ஸர்தாருக்குத் தெரிந்தன.

காந்திஜி உபவாசத்தை நிறுத்திய பொழுது, நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதாக அவருக்கு வாக்களித்தவர்களில், காங்கிரஸ்காரர், முஸல்மான்கள், சீக்கியர், ஹிந்து மகாசபையினர், ராஷ்டிரீய ஸ்வயம் ஸேவாதளத்தவர் ஆகிய அனைவரும் சேர்ந்திருந்தனர். நாங்கள் இனி அன்புடன் வாழ்வோம் என்று அவர்கள் வாக்களித்து, அவ்வாறு வாழவும் தொடங்கியிருக்க, ஒரு நாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் எவனோ காந்திஜியைக் குறிவைத்து குண்டு ஒன்றை வீசினன். அது அவரைத் தாக்கவில்லை. அன்றைய பிரார்த்தனையில் காந்திஜி, "நான் நாட்டுக்கும்

மதத்திற்கும் ஆண்டவன் ஏவலால் பணி புரிகிறேன். என்னை அழைத்துக்கொள்ள வேண்டுமென்று அவன் நினைக்கும் பொழுது அழைத்துக் கொள்வான். ஆகவே மரணத்தைக் குறித்து எனக்கு விசேஷமாக எதுவும் தோன்றவில்லை.'' என்று கூறினர். இரண்டாவது பரீட்சை நேற்று நடந்தது. ஆண்டவன் காந்திஜியை விடுவித்து விட்டான்.

நாம் அனைவரும் ஒருநாள் உடலைத் துறந்து போக வேண்டியவர்களே. ஆகவே மரணத்தைக் குறித்துச் சிறிதும் வருந்தக் காரணமில்லை. தாய் தன் பல பிள்ளைகளைக் கருதுவதைப் போலவே காந்திஜி உலகின் மக்கள் அனைவரையும் கருதி வந்தார். ஹிந்துக்கள், ஹரிஜனங்கள், முஸல்மான்கள், கிறிஸ்தவர்கள், தாம் எதிர்த்துப் போரிட்ட ஆங்கிலேய அதிகாரிகள் ஆகிய அனைவரிடமும் அவர் அன்பே கொண்டிருந்தார். 'நல்லாரை நேசிப்பது போலவே தீயாரையும் நேசிக்கவேண்டும், எதிரியை அன்பினல் ஆட்கொள்' என்பது அவர் அளித்த மந்திரம். நமக்கு சத்தியாக்ரஹத்தை போதித்தவர் அவரே. நமக்கு எத்தகைய தீமை விளைந்த போதிலும் எதிரிக்குச் சிறிதும் தீமை விளைவியாதிருக்க அவர் நமக்குக் கற்பித்தார். இத்தகைய பெரியார் உடலை நீத்தேகினர் என்றால் அது அழுவதற்குரிய சமயமல்ல. தாய் நம்மைத் துறந்து செல்லுகையில் நமக்குத் தோன்றும் உணர்ச்சி காந்திஜியின் மரணத்தினல் நம்முள் எழுகிறது என்பதில் ஐயமில்லை. ஆனல் நாம் அதனல் சோர்வுறலாகாது.

மகாத்மா ஏகநாதர் பாகவதத்தில், "இறக்கும் குரு,

அழுதாற்றும் சீடன் இருவரின் படிப்பும் வீண்" என்று கூறியிருக்கிறார். சாவுக்கு பயந்த குரு ஒருவர் இருந்தார். அவர் தாம் இறக்கும் தறுவாயில், "ஐயோ, நான் இறக்கிறேனே!" என்று கூவினார். அப்பொழுது அவரது சீடர்களும் அழுது அரற்றலானார்கள். இவ்வாறு இறந்த குரு, அழுத சீடன் ஆகிய இருவர் பெற்ற படிப்பும் வீணே என்று மகாத்மா ஏகநாதர் கூறியிருக்கிறார்.

சாவுக்கஞ்சும் குரு அல்ல காந்திஜி. 'எந்தப் பணியை பயனெதையும் கருதாது நாம் புரிகின்றோமோ அதுவே கடவுளின் பணியாகும்; அதைப் புரிந்து கொண்டே அவன் நம்மை அழைக்கும் தருணத்தில் போகச் சித்தமா யிருக்க வேண்டு'மென்று அவர் நமக்கு போதித்திருக்கிறார். அவருடைய மரணம் அவ்வாறே நேர்ந்தது. ஆகவே, இது சிறந்த முடிவாயிற்று என்பதை உணர்ந்து நாம் பணியாற்ற முற்படுவோமாக.

சில தினங்களுக்கு முன் ஆச்ரமத்தைச் சேர்ந்த சிலர் காந்திஜியைக் காணச் சென்றிருந்தார்கள். அப்பொழுது அவருடைய உபவாசம் நடந்துகொண்டிருந்தது. உபவாசத்திலிருந்து அவர் பிழைப்பாரா, இறந்து விடுவாரா என்று யாருக்குத் தெரியும்? போயிருந்தவர்கள், "நீங்கள் இந்த உபவாசத்தில் இறந்து போனால் நாங்கள் என்ன வேலை செய்ய வேண்டும்?" என்று கேட்டதற்கு காந்திஜி, "இம்மாதிரியான கேள்வியே உங்களுக்கு எப்படிக் கேட்கத் தோன்றிற்று? உங்களுக்குத்தான் நான் ஏராளமான வேலை வைத்திருக்கிறேனே. இந்தியாவில் கதரைச் செய்ய வேண்டும். கதர் சாஸ்திரம் அமைக்கவேண்டும். இவ்வளவு

பெரிய வேலை இருக்க, என்ன செய்வது? என்ற கவலை எப்படி உண்டாகிறது?" என்று பதில் கூறினர்.

ஆகையால் அவர் நமக்கு இட்டுள்ள வேலையை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். எண்ணற்ற ஜாதிகளும், சமூகங்களும் சேர்ந்து நாம் இங்கே ஒருமிக்க வாழ்கிறோம். நம் நாட்டில் வாழ்வோர் 40 கோடி மக்கள்; இது நமது பெரிய அதிர்ஷ்டமாகும். ஆனல் நாம் பரஸ்பரம் அன்பு பூண்டு வாழ்ந்தாலல்லது இது கிட்டாது. இவ்வளவு பிரம்மாண்டமான நாட்டில் வாழும் பேறு அனைவருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. நம் நாட்டில் உள்ள மதங்கள் பல, சம்பிரதாயங்கள் பல. நான் இதை நமது பெரும் பேறென்றே மதிக்கிறேன். ஆனல் நாம் அன்புடன் வாழ்ந்தாலல்லது இப்பெரும்பேறு கிட்டாது. நாம் அன்புடன் வாழவேண்டுமென்பதையே காந்திஜி தம் இறுதி உபவாசத்தினல் போதித்தார். பிள்ளைகள் அன்புடன் வாழவேண்டுமென்று கோரி தாய் உபவாசம் இருப்பது போன்றதே அவ்வுபவாசமும். மனிதர் அனைவரும் ஒன்றே என்று அவர் நமக்கு போதித்தார். ஹரிஜனசேவை, கதர் சேவை, கிராம செவை, 'பங்கிகள்' (தோட்டிகள்) சேவை முதலிய பல சேவைகளை அவர் நமக்குக் காட்டிப் போயிருக்கிறார்.

இப்பொழுது நான் அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அனைவருடைய உள்ளங்களையும் ஒரு தனியுணர்ச்சி ஆட்கொண்டிருக்கிறது. ஆனல் வெறும் அழுகையோடு நிறுத்தி வாளாயிருக்க வேண்டாமென்று நான் சொல்லியாக வேண்டும். நம்முன் உள்ள பணியில் இறங்குவோம். நான் உங்களுக்குச் சொல்வது போலவே

நீங்கள் எனக்கும் சொல்லுங்கள். இவ்வாறு ஒருவர் மற்ற வருக்கு போதிக்க அனைவரும் காந்திஜி காட்டிய பணிகளை புரியத் தொடங்குவோம். பக்தரும், மேன்மக்களும் ஒருவர் மற்றவருக்கு அறிவு புகட்டுவதோடு, பரஸ்பரம் அன்பு பூண்டொழுகுவர் என்று கீதையும் குரானும் கூறுகின்றன. நாமும் அவ்வாறு செய்வோமாக. இன்று வரையில் நாம் சில சமயங்களில் குழந்தைகளைப் போல் நம்முள் சண்டை யிட்டு வந்தோம். நம்மை எல்லாம் அவர் கவனித்து நடத்தி வந்தார். அனைவரையும் பார்த்து நடத்துபவர் இப்பொழுது இல்லை. ஆகையால் ஒருவர் மற்றவருக்கு புத்தி சொல்லியும், அனைவரும் அனைவரிடமும் அன்பு கொண்டும், நாமெல் லோரும் சேர்ந்து காந்திஜியின் போதனையைப் பற்றி நடப்போமாக.

(பிரார்த்தனைக் கூட்டம்: பரந்தாமம், பவனர். 31—1—48, மாலை 4-30.)

2

இன்று அதிகமாக எதுவும் சொல்ல எனக்கு மன மில்லை. ஒரே ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். இந்தி யாவின் சரித்திரகாலத்தில் என்றுமே நடைபெறாத சம்பவம் இப்பொழுது நிகழ்ந்திருக்கிறது. ஹிந்து மதத்தில் எந்த ஸத்புருஷனும் கொலையுண்டதில்லை என்று நான் பெருமைப் படுவதுண்டு. அந்தப் பெருமையில் இப்பொழுது மண் விழுந்துவிட்டது. ஒரு ஸத்புருஷர் கொலையுண்டார்; அதுவும் அவர் பிரார்த்தனைக்குக் கிளம்பிச் செல்லும் சமயத்தில்; கொலை செய்ததற்கு நோக்கமோ ஹிந்து மதத் தைப் பாதுகாப்பதாகும். இம்மூன்று விஷயங்களையும்

சிந்திக்கும்பொழுது எனக்கு விவரிக்க முடியாத வெட்கமுண்டாகிறது.

நேற்று, "நாம் அழும் சீடர்களாகக் கூடாது" என்று சொன்னேன். ஆகையால் நான் அழவில்லை, ஆனால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகவே கோபுரியில் * 13 நாட்களுக்கு பொது ஜனப் பிரார்த்தனை நடத்த விரும்புவதாகவும், நானும் அதில் கலந்துகொள்ளவேண்டுமென்றும் இன்று எனக்கு அறிவிக்கப்படவே, நான் அதைச் சுளுவாக ஏற்றுக்கொண்டேன்.

பாபுவின் வாழ்விற்கு இது மிகப் பொருத்தமான முடிவென்று எனக்குத் தோன்றுகிறது. மிகச் சிறந்த கருத்துக்களுடன் உடலை நீப்பது புண்ணியத்தின் எல்லையைக் குறிக்கும் என்று தர்மநூல் கூறுகிறது. ஆயுள்முழுமையும் தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டி முயன்ற ஒருவர் அன்றையப் புனித வேலையைச் செய்து முடித்தபின் பிரார்த்தனைக்குப் போய்க்கொண்டிருக்கிறார், நண்பர்களுடன் நடந்துகொண்டிருக்கிறார், அனைவரையும் பிரார்த்தனைக்கு அழைத்துக்கொண்டிருக்கிறார், அப்பொழுது அவருக்கு மரணம் வருகிறது. இம்மரணம் மிகவும் புனிதமானதாகும். நாம் இதன் மர்மம் அனைத்தையும் உணர்ந்துகொண்டால், இதனால் மதமே தூய்மைபெறும், நாட்டுக்கும் நன்மையுண்டாகும்.

பிரார்த்தனைக்கு இந்த மாலை நேரம் கிடைத்தது

---

* ஸ்ரீ ஜம்னாலால்ஜி பஜாஜ் தம் இறுதிக் காலத்தை கோசேவையிலேயே கழித்தார். வார்தாவில் அவர் தங்கியிருந்து கோசேவை செய்து வந்த இடத்திற்கு கோபுரி என்று பெயர்.

மிகவும் நல்லதாயிற்று. நாள் முழுதும் வேலை செய்த பின், மாலையில் நமது மனம் ஆண்டவனிடம் செல்வதோடு நமது வேலை பூர்த்தியாகிறது. நாம் எங்கிருப்பினும் சரி, கோஷ்டிப் பிரார்த்தனையை மறத்தலாகாது. பிரார்த்தனையில் நம் மன மனைத்தையும் செலுத்திவிடவேண்டும். அதனால் உள்ளத்தின் கறையெல்லாம் கழுவப்பட்டுப் போம். பிரார்த்தனைக்குள்ள ஆற்றல் அற்புதமானது. அதனால் உள்ளத்தில் மின்சாரம் போன்ற சக்தி பாய்கிறது. இனி இப்பிரார்த்தனையுடன் காந்திஜியின் நினைவு இணைந்திருக்கும். பகவான் நாரதரிடம், "नाह वसामि वैकुंठे" (வைகுண்டம் போன்ற சிறந்த இடத்திலும் நான் இரேன்) योगिनां हृदये अपि (தனியாய் இருந்து தியானம் புரியும் யோகிகளின் உள்ளத்திலும் இரேன்.) रवौ (சூரிய மண்டலத்தை யொத்த ஒளிமயமான இடத்திலும் இரேன்.) ஆனால் मद्भक्ता यत्र गायन्ति तत्र तिष्ठामि नारद (என் பக்தர் சேர்ந்து என்னைப் பாடித்துதிக்கும் இடத்தில் நான் இருக்கத் தவறேன்) என்று சொல்லியிருக்கிறார். இதுபோலவே காந்திஜியும், "நான் எந்தச் சிறந்த இடத்திலும் இரேன்; ஆனால் பிரார்த்தனை நடக்கும் இடத்தில் நான் இருக்கத்தவறேன்" என்கிறார். அவர் இவ்வாறு சொல்வது என் காதில் விழுகிறது!

(பிரார்த்தனைக் கூட்டம்: கோபுரி, நால்வாடி. 1—2—48)

3

ஸர்தார் வல்லபாய் விடுத்துள்ள அறிக்கையில், 'நடந்துள்ள கொடிய சம்பவத்தை எண்ணும்பொழுது எல்லை

யில்லாத்துக்கம் மூளுகிறது, ஆத்திரமும் எழத்தான் செய்யும்; ஆனல் ஆத்திரத்தை அடக்க வேண்டு'மென்று மக்களிடம் கோரியிருக்கிறார். ஆனல் இது சாத்தியமாவதற்கு ஆத்திரத்திற்கு ஆற்றல் இல்லை என்றும், அமைதிக்கே சக்தியுண்டென்றும் உணர்தல் வேண்டும். மேலும், இந்தியாவைப் போல் பல சமூகங்கள் சேர்ந்தமைந்த நாட்டில் ஹிம்சைக்கு மதிப்பு உண்டாகிவிடுமேல், சுயராஜ்யம் நிலைப்பதற்கில்லை என்பதும் உணரப்படவேண்டும். நடந்துள்ள கொடுஞ் செயலுக்கு ஹிம்சைக் கருத்தின் பக்க பலம் இருக்கிறது. அந்த ஹிம்சைக் கருத்தை நாம் ஹிம்சையால் முறியடிக்க முடியாது. அதை அஹிம்சையாலேயே தகர்க்க முடியும். ஆனல் இதுவரையில் இந்தியாவில் நாம் அனுஷ்டித்த அஹிம்சை யெல்லாம் பெரும்பாலும் வேறு வழி யில்லை என்றதனலேயே. அதனல் சுயராஜ்யம் கிட்டும் என்ற ஆசை காரணமாகவும் நாம் அதை ஏற்றிருந்தோம். ஆனல் இப்பொழுது அது இல்லை. இனி அத்தகைய நிர்ப் பந்தத்தினலும், பலஹீனத்தினலும் ஏற்றிருந்த அஹிம்சை யால் ஏதும் பயன் இல்லை. இப்பொழுதோ நாம் வீரமிக்க அஹிம்சையைப் பயில வேண்டும். அதன் பொருட்டு கடவுள் இந்த சந்தர்ப்பத்தை உண்டாக்கி யிருக்கிறார். நாம் இதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். எவர்கள் இக்கொடு மைடையப் புரிந்தார்களோ (இங்கே நான் வேண்டுமென்றே பன்மையைக் கையாண்டிருப்பதற்குக் காரணம், இது ஒரு தனி மனிதனின் செயலல்ல; அவனை ஏவிய கோஷ்டி யொன்று இருக்கிறது என்பதே) அவர்கள் இது சரியென்று கருதியே செய்திருக்கிறார்கள். சரியான வேலையொன்றை

ஹிம்சையின் மூலமாக நிறைவேற்றலாம், அவ்வாறு நிறைவேற்றுவது தர்மமுமாகும் என்ற நம்பிக்கை வழங்கும் வரையில் இம்மாதிரியான வெறுக்கத்தக்க செயல்கள் நடந்துகொண்டுதானிருக்கும். நாம் நமது உள்ளத்தைக் கூர்ந்து கவனிப்போமானல், அங்கும் ஒருக்கால் இத்தகைய கருத்துக்கள் மறைந்திருப்பது புலனுகலாம். நம் உள்ளத்தில் இக்குற்றத்தின் ஒரு திவிலை இருந்தாலும், வெளியில் இதுவே நூறு மடங்கு அதிகமாகப் பருத்துக் காணப்படுவது இயற்கை. நாம் ஆத்திரத்தை அடக்கினல் மட்டும்போதாது, அன்பு புரியக் கற்கவேண்டும். நாம் வாழ்க்கையையே அவ்வகையில் மாற்றி அமைக்கவேண்டும். இது வரையில் பாபூ இருந்தாராகையால், அவர் நம்மை யெல்லாம் மூடிக்கொண்டிருந்தார். இப்பொழுதோ நாம் உலகின் முன் நிற்கிரும். இனி நம்மை மூடவேண்டுமானல் நமது நல்லெண்ணங்களும், நற்செயல்களுமே மூடவேண்டும். இன்று நாம் பாடிய துளசிதாசரின் பதத்தில் நாம் சந்தனத்தைப்போல் ஆக வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சந்தன மரத்தைக் கோடரி வெட்டினுலும் சந்தனம் அதற்கு மணத்தை அளிக்கிறது. அதாவது நாம் ஆத்திரம் காட்டாதிருத்தல் மட்டும் போதாது; அஹிம்சையிலும் சத்தியத்திலும் உறுதியை வளர்த்து அன்பொழுக நடப்பது இன்றியமையாததாகும்.

ஏசுநாதர் உயிர் வாழ்ந்த வரையில் அவரது சீடர்கள் அதிக ஊக்கம் காட்டவில்லையென்று சரித்திரத்தில் படித்திருக்கிரேம். ஆனல் ஏசுநாதர் இறந்த பின்னரோ அவர்களுக்கிடையே பெருத்த ஆவேசம் பொங்கி எழுந்ததாம்;

அவர்கள் எல்லாச் சங்கடங்களையும் சமாளித்துக் கொண்டு மதப் பிரசாரம் செய்தார்கள். அதன் பயனாகவே இன்று உலகத்தில் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களைக் காண்கிறோம். அவர்கள் பெயரளவிலேயே கிறிஸ்தவர்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அப்படிப் பார்க்கையில் ஹிந்துக்களும் முஸல்மான்களும் கூட பெயரளவில் தானே. ஆனால் அந்த மதத்தவர்களின் தொகை இவ்வளவு அதிகமாக இருப்பதிலிருந்தே அவைகளிடையே நல்ல அம்சங்கள் இருக்கும் என்று உணரவேண்டும்; அதற்குரிய சிறப்பு அந்த சீடர்களையே சாரும். சீடர்களிடம் தோன்றிய புத்துணர்ச்சிக்கு, ஏசுநாதரின் பலியே காரணமென்று சரித்திரம் கூறுகிறது. காந்திஜி கொலையுண்டதைக் குறித்து நாம் ஆத்திரமுற்று விவேகத்தைக் கைவிட்டோமானால் காந்திஜியைக் கொன்ற பாவத்தில் நாமும் பங்காளிகளாவோம்; நமது ஒளியும் மங்கிப்போம். ஆகவே உடலைப் பற்றிய கவலையைத் துறந்து, ஆழ்ந்த சிந்தனையின் பயனாக உள்ளத்தின் மாசுகளைக் களைந்தெறிந்து, புதிய மனிதர்களாவோமானால், நாம் எவ்வளவோ வேலைகளைச் செய்து முடிக்கலாம். அதற்கென புதிய ஸ்தாபனம் அமைக்கவோ, திட்டம் வகுக்கவோ தேவையில்லை. ஆனால் உள்ளத்தை முனைந்து கழுவுதல் தேவை. அதன் பொருட்டு புறத்திலிருந்து மிகமிகக் கடுமையான தூண்டுதலை கடவுள் நமக்கு அளித்து விட்டார்.

(பிரார்த்தனைக் கூட்டம்: சாந்தி குடீரம், கோபுரி, நால்வாடி. 2-2-48)

4

வர்த்தாவின் மகா ஜனங்களே!

இன்று அதிகமாக எதுவும் சொல்ல மனமில்லை. ஆனால் உங்களுக்கென ஒன்றிரண்டு விஷயங்களைக் கூற விரும்புகிறேன். உங்களுக்கும் எனக்கும் இருபத்தைந்து வருஷப் பழக்கம். நமது இக் கிராமத்தில் காந்திஜி பதினைந்து ஆண்டுகள் வசித்திருக்கிறார். இவை காரணமாக நமக்கு மிகப் பெரிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. காந்திஜி 15 ஆண்டுகளைக் கழித்த இடத்தில் அவருடைய போதனைகளின் பயன் நிச்சயமாகத் தெரிய வேண்டும். இந்தியா மட்டுமல்ல, உலகமே நம்மிடம் இதை எதிர் பார்க்கும் என்பதை உணர்ந்து நாம் நமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

நான் சொல்ல வேண்டிய முதல் விஷயம், இந்தியாவில் அனேக ஜாதிகள், மதங்கள், பாஷைகள் என எண்ணற்ற வேற்றுமைகள் இருப்பினும் அவ்வேற்றுமைகளை நாம் ஒப்பக்கூடாது என்பது. அனைவருடனும் நாம் உடன் பிறந்தவர்களைப் போல் பழக வேண்டும். முக்கியமாக நான் இதை வாலிபர்களிடமும் மாணவர்களிடமும் வற்புறுத்திக் கூறுகிறேன். இந்தியாவின் போதம் உலகில் பரவ வேண்டு மென்று நாம் விரும்பினால் இங்குள்ள வேற்றுமைகளை யெல்லாம் அகற்றியாக வேண்டும். "இந்தியா மானிடர் வாழும் ஒரு மகா சமுத்திரம்" என்று நமது மதிப்பிற்குரிய கவி, ரவீந்திரநாத டாகுர் சொல்லி யிருக்கிறார். பண்டைக்காலம் தொட்டே இந்தியா எல்லா மனிதர்களுக்

கும் அன்புடன் அடைக்கலம் அளித்து வந்திருக்கிறது. மகா புருஷர்கள் அதை இவ்வாறு புகழ்ந்திருக்கிறார்கள். எல்லா மனிதர்களும், வேற்றுமைகளை மறந்து, ஒரு மனப் பான்மையும் அன்பும் பூண்டு வாழ்வதெவ்வாறு என்பதை நமக்குக் காட்டிய மகா புருஷர் கிடைத்தது நமது அதிர்ஷ்ட மாகும். இத்தகைய மகா புருஷர் ஆயிர மாயிரம் ஆண்டு களில் எப்பொழுதேனும் கிடைப்பார். ஆகையால் கட்சி கள் கட்டுவதை நாம் விட்டு விடவேண்டும். கட்சிகள் கட்டு வதால் ஏற்கெனவே இரண்டாகப் பிளவுபட்டுள்ள இந்தியா நூறு கூறாகி விடும். இந்தியாவின் அன்பு, ஒற்றுமை ஆகியவற்றின் போதம் உலகெங்கும் பரவ வேண்டுமென்ற விருப்பம் இருக்குமானால் முதலில் இந்தியா ஒன்றாக வேண்டும். ஆசியா இந்தியாவிடமே உதவியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ இன்று எண்ணற்ற வேறுபாடுகள் என்ற வெடிமருந்துக் கிடங்குகள் மலிந்து கிடக்கின்றன. அவற்றில் தீப் பொறி ஒன்று விழுவது தான் தாமதம், எந்த நிமிஷத்திலும் அவை வெடிக்கும் நிலைமை இருந்து வருகிறது. ஆகவே நம்மவர் கள் எல்லா ஜாதி சமய வேறுபாடுகளையும் போக்கி ஒன்று பட்டாக வேண்டும். அதில் தான் நமக்கு நன்மை யுண்டு.

இது பற்றி பானிபட் போரின் கதை யொன்றைச் சொல்லுகிறேன்; அதை நினைவில் இறுத்திக் கொள்ளுங் கள். ஒரு நாள் மாலையில் அஹமத் ஷா அப்தாலி தன் கூடாரத்திலிருந்து உலாவும் பொருட்டு வெளியே கிளம் பினான்; அப்பொழுது அவனது பார்வை மஹாராஷ்டிரர் படை வீடுகளின் பக்கம் செல்லவே அங்கே அவன் பல

விடங்களில் தீ எரிந்து கொண்டிருந்ததைக் கண்டான். அவன் தன் தோழனிடம், "ஏன் பல விடங்களில் நெருப்பு எரிகிறது?" என்று கேட்டான். தோழன், "ஹிந்துக்களிடையே பல ஜாதிகள் உண்டு. ஒருவன் தொட்டதை மற்றவன் உண்ண மாட்டான்; ஆகையால் அவர்கள் தனித்தனியே சோறு சமைத்துச் சாப்பிடுகிறார்கள்" என்று பதில் சொன்னான். இதைக் கேட்ட அவன், "அப்பொழுது கவலை இல்லை. நான் இச்சண்டையை ஜயித்து விட்டேன் என்று நினைத்துக் கொள்" என்றான். இதிலிருந்து நமது பலம் எதில் இருக்கிறது, நமது பலவீனம் இருப்பது எதில் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

மற்றொரு விஷயம் சொல்ல வேண்டும். நீங்களே சட்டத்தை அமல் நடத்தத் தொடங்காதீர்கள். குற்றவாளிக்கு உரிய தண்டனையை சர்க்கார் அளிக்குமென்று நம்புங்கள். அவ்வேலையை நீங்கள் செய்ய முற்பட்டால் அராஜகம் ஏற்பட்டுவிடும். ஆகவே அவ்வாறு செய்ய வேண்டாம். சர்க்காருக்கு உதவி அளித்து அதை பலப்படுத்துங்கள். மக்கள் சர்க்காரின் அதிகாரங்களை ஏற்று தம் மனம் போல் நடக்கத் தொடங்கி விட்டால், எந்த அரசாங்கமும் நிலைக்க இயலாது.

(பிரார்த்தனைக் கூட்டம்: காந்தி சவுக்கம், வர்த்தா.
3—2—48, மாலை)

5

இன்று நான் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். பாபூ நம் முன் இட்டுள்ள கருத்துத்

தொகுதியின் மத்திய பிந்து கதர்; மற்றவை யெல்லாம் அதன் நாற்புறமும் அமைந்துள்ளவை. சமீபத்தில் ஆச்ர மத்தைச் சேர்ந்தவர்கள் அவரிடம் செய்தி வேண்டிய பொழுது, அவர், 'நீங்கள் கதர் சாஸ்திரத்தை அமைக்க வேண்டும்; அதிலேயே தம் வாழ்நாளைச் செலவிட வேண்டு' மென்று சொல்லி யிருக்கிறார். இப்பொழுது பாபூ சென்று விட்டதால், நாமெல்லோருக்கும் அவருடைய உரு — நான் சொல்வதற்குத் தவறான பொருள் கொள்ளப்படாதென் றால்—கதரேயாகும். நம் இடத்திலேயே நாம் விரும்பும் வகை யில் கதர்-வாழ்க்கை நடைபெறவில்லை. கிராம சேவா மண்டலத்தில் தொழிலாளர்களும் குடும்பிகளான ஊழியர் களும் இருக்கிறார்கள். தொழிலாளர் வீடுகளில் இன்னும் கதர் புகுந்த பாடில்லை. ஊழியர் அணியும் கதரும் முழுவ தும் அவர்களே உற்பத்திசெய்ததல்ல. நாம் இவ்விஷ யத்தை இங்கே நிறைவேற்றா விட்டால் நமது ஆராய்ச்சி மனப்பான்மையில் குறைபாடு இருக்கிறதென்று உணர வேண்டும். நம்மவர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட் டிருப்பது உண்மை. ஆனால் வேறு தொழிலெதுவும் இல் லாதவர்களே நூல் நூற்க வேண்டுமென்பது நமது நோக்க மல்லவே? துணி அணிபவர் ஒவ்வொருவரும் நூற்கவேண்டும், நூற்ற நூலை நெசவுக் காரரைக் கொண்டு நெய்வித்துக் கொள்ள வேண்டும் என்பதல்லவா, நமது குறிக்கோள்? நமது கிராமத்தில் இதை நிறைவேற்ற நாம் முயலவேண்டும்.

அவ்வாறே இங்கே மஹிளாச்ரமம் இருக்கிறது. அங்கே சகோதரிகள் நூல் நூற்ற போதிலும் அவர்களும் கதர் வஸ்திராலயத்திலிருந்தே துணி வாங்குகிறார்கள். கதர்

விஷயத்தில் மஹிளாச்ரமம் சுயதேவைப் பூர்த்தியை முழு மையும் செய்ய வேண்டும். நூலெல்லாம் பெண்களாலேயே நெய்யப்பட வேண்டும். இதிலேயே கல்வி நிரம்பி யிருக்கிறது; இது வாழ்வில் அனுபவத்திற்கு வரவேண்டும். அப்பொழுதுதான் எதிர்பார்க்கப்படும் காந்திஜியின் மகிமை மக்கள் மூலமாக வெளியாகும்.

இதுவே கல்லூரி மாணுக்கர்களுக்கும் பொருந்தும். அவர்களிடையே விழிப்புண்டாகி, கதர்-வாழ்வு வாழ்வதில் அவர்கள் தம் அறிவையும் ஆற்றலையும் செலவிடுவார்க ளானல் அவர்கள் ஆண்மையுள்ளவர்களாகவும் ஏழை-எளி யோரின் ஊழியர்களாகவும் இயலும்.

ஒற்றுமையைத் தெரிவிக்க வேண்டி நாம் புறச்சின்ன மெதையேனும் அமைக்கிறோம். ஆனல் இதிலும் சிறந்த சின்ன மெதுவும் இருக்க முடியாது. இதிலிருந்து பிறக்கும் நிர்மாண சக்தியின் பயனுக இன்றையச் சூழ்நிலையில் மலிந் துள்ள ஹிம்சை மனப் போக்கை நம்மால் அகற்ற முடியும்.

நமக்கு ஏராளமான வேலைகளிருப்பதால் நூல் நூற்க நேரமே இல்லை என்று நினைப்பது நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகும். காந்திஜியின் உதாரணம் நம் முன் இருக்கிறது. அவர் பலவகை வேலைகளில் நாள் முழு மையும் ஈடுபட்டிருந்தார்; ஆயினும் நூற்பதற்கு நேரம் ஒதுக்குவது அவருக்கு சாத்தியமாகவே இருந்தது.

(பிரார்த்தனைக் கூட்டம்: சாந்தி குடீரம், கோபுரி,
நால்வாடி. 4—2—48)

6

காந்திஜியின் கொலையைக் குறித்து உலகத்திலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் தம் துக்கத்தையும், அவரைப் பற்றிய தம் கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு நாட்டின் பிரதம மந்திரி, 'சென்ற மகா யுத்தத்தினால் மனிதரிடையே மிருகத்தனம் எந்த அளவுக்குப் பரவி விட்டதென்பது இந்த சம்பவத்தினால் வெளியாகிறது' என்று கூறியிருக்கிறார். அதே மகாயுத்தத்தில் பெரிய சேனாதிபதியாக விளங்கிய மாக் ஆர்தர், 'நாம் காந்திஜியின் கருத்துக்களை அனுசரித்தே ஆகவேண்டும்; இல்லையேல் உலகில் அமைதி நிலவுவதற்கில்லை' என்கிறார். உள்ளத்திலிருந்து வெளிவந்துள்ள இம்மொழிகள் ஒரு சேனாதிபதியினுடையவையாகையால் அவை நம் கவனத்தைக் கவர்கின்றன.

அது எங்கிருந்து அடித்ததோ, இந்தியாவில் ஹிம்சைக் காற்று புகுந்துவிட்டது. இவ்வளவு பெரிய நாட்டில் பல் வேறு கருத்துக்களும், வாதங்களும் எழுவது இயற்கை. இந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஹிம்சை கருவியாக ஏற்கப்படுமேல், அதன் விளைவு நாசமே தவிர வேறெதுவும் இருப்பதற்கில்லை. இது நமக்குப்புரிய வேண்டும்; ஆனால் புரியமாட்டேன் என்கிறது. பெரிய சிந்தனாசீலர்கள், நாம் இறுதியில் அஹிம்சையையே அண்ட வேண்டியிருக்குமென்றும், ஆனால் இப்பொழுதைக்கு ஹிம்சையின்றி ஒன்றும் ஆகாதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அஹிம்சை என்பது அந்திய காலதர்மம் அல்ல, இப்பொழுதைய தர்மம்; இறுதிக் காலத்ததும், இடைக்காலத்ததும், எக்காலத்ததுமாகும் என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் எப்பொழுதேனும் அது மிகமிகத் தேவையென்றால் அது இப்பொழுதே.

இப்பொழுது நம்முன் எழுந்துள்ள பிரச்னை அஹிம்சையா, ஹிம்சையா என்பதல்ல. நாம் தேர்ந்து ஏற்க வேண்டியது விஞ்ஞானம், ஹிம்சை ஆகிய இரண்டினுள் ஒன்றையே. விஞ்ஞானமும் ஹிம்சையும் ஒன்று சேரலாகாது. இரண்டும் கூடுமேல் நம்மை விழுங்கிவிடும். ஹிம்சையைக் கைவிட விருப்பமில்லையானால், விஞ்ஞானத்தைத் துறந்து பண்டைக்கால வாழ்க்கைக்குத் திரும்பிவிட வேண்டும்; அப்பொழுது ஹிம்சை நேர்ந்தாலும் அதனால் இப்பொழுது போன்ற நஷ்டம் விளையாது. விஞ்ஞானம் வேண்டுமென்றாலோ ஹிம்சையை ஒழித்துவிட வேண்டும். விஞ்ஞானத்தில் அபார சக்தி பொதிந்திருக்கிறது; ஹிம்சையை அகற்றிவிடுவோமானால் விஞ்ஞானத்தின் உதவி கொண்டு இம்மண்ணிலேயே விண்ணை இயற்ற இயலும். ஆனால் விஞ்ஞானத்துடன் ஹிம்சையை இணைத்துவிடுவோமானால் இரண்டும் சேர்ந்து மனித ஜாதியையே பூண்டோடு அழித்துவிடும். ஆகவே விஞ்ஞானத்தை மதிப்பவர் ஒவ்வொருவரும் ஹிம்சையை எதிர்க்க அனைவரையும் அழைக்க வேண்டும். போதனை சாஸ்திரமும் இதை உணர வேண்டும். ஹிம்சை அதற்குப் பெரிய விரோதியாகும். ஹிம்சை புகுந்த இடத்தில் கல்வியே நடைபெறுவதற்கில்லை. சமூக சாஸ்திரத்திற்கும் இது பொருந்தும். சமுதாயத்தின் அஸ்திவாரம் ஹிம்சை அல்ல அஹிம்சையே. அஹிம்சையை ஏற்காத சமூக சாஸ்திரம் அழிந்துபடும். இம்முறையில் சிந்திக்கும் பொழுதுதான் ஹிம்சை அரக்கன் அகலுவான்.

பாபூ மறைந்தார்; அவருடைய நினைவை நிலை

கிறுத்தும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. நாம் அஹிம்சை-வாழ்வு வாழாது ஸ்தூலமான சின்னமெதை யேனும் அமைப்போமானல் உலகோர் நம்மைக் கண்டு நகைப்பார்கள். ஆகையால் இப்பதிமூன்று நாட்களிலும் நாம் நம் உள்ளங்களைத் துருவி ஆராய்ந்து, நம் வாழ்வைத் திருத்தி அமைப்போமாக.

நாம் பிராயச்சித்தம் புரியவேண்டுமென்று ஒரு நண்பர் எழுதியிருக்கிறார். அதைப் புரிவது எப்படி? ஹிம்சையினல் நற்பயன் எதுவும் விளையும் என்ற சிறு சந்தேகமும் நமக்கிருந்திருக்குமானல் அதை நாம் அகற்றி விடவேண்டும். இதுவே தலைசிறந்த பிராயச்சித்தம். ஆனல் இது பேசுவதற்குரிய விஷயமல்ல; பேச்சினல் இது நடைபெறக் கூடியதுமல்ல.

சாதாரணமாகவே நான் பேச்சுக்காரன் அல்ல. எப்பொழுதுமே எனக்குப் பேச்சில் வெறுப்பே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இங்கே பேசுவதோ எனக்கு பாரமாகவே தோன்றுகிறது. ஆபினும் ஒரே வழிநடக்கும் நண்பர் பலர் கூடியிருக்கிறோம்; உங்கள் முன் பேசுவ தால் என் தீர்மானம் உறுதிபெறும் என்ற எண்ணத்தினல் பேசுகிறேன். எனக்குள் பேசுவது போன்றதே என் பேச்சு.

(பிரார்த்தனைக் கூட்டம் : சாந்தி குடீரம், கோபுரி, நால்வாடி. 5—2—48)

7

இன்று ராமாயணத்தில் நாம் கேட்டதில் ஒரு பெரிய கருத்து காணப்பட்டது. அதில் உருவத்தை விட நாமம்

பெரியது என்று கூறப்பட்டிருக்கிறது. உருவம் சிறிது காலத்திற்கு இருந்து அழியும் தன்மையது; நாமம் என்றுமிருப்பது. ஒரு மனிதன்—அவன் ராமனைப் போன்றவனாயினும் சரியே—செய்யக்கூடியதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாகச் செய்யும் ஆற்றல் நாமத்திற்கு உண்டு. உருவம் என்பது மனிதனையும், நாமம் என்பது அவனுடைய கருத்தையும் குறிப்பன. மனிதனும் பெரியவனே; ஏனெனில் அவனிடம் ஏதேனும் கருத்துதோன்று இருக்கிறது. அதாவது, அம்மனிதன் அக் கருத்தை வெளியிடுவதற்குரிய கருவியாக உதவுகிறான். ஆயினும் ஆற்றல் கருத்திலேயே நிரம்பிக் கிடக்கிறது. இதன் அனுபவமும் சேருகிறது. மனிதனுடைய தன்மை சில அம்சங்களில் கருத்துக்கு உதவியளிப்பதாய் இருந்த போதிலும், அதனால் தடையும் ஏற்படக்கூடும். மனிதன் அகன்ற உடனே எஞ்சுவது சுத்தக் கருத்தொன்றே. ஆகவே துளசிதாசர் ராமனைக் காட்டிலும் நாமம் பெரிதென்று விளக்கினார். ராமன் கரையேற்றியவர்களை எண்ணலாம்; ஆனால் ராம நாமத்தினால் இதுவரை முக்தி பெற்றவர்களுக்கும், இனிப் பெற விருப்பவர்களுக்கும் கணக்கில்லை. கருத்தின் இவ்வாற்றலை துளசிதாசர் நாம மகிமை என்று நம் முன் இட்டிருக்கிறார். இறுதியில் மனிதனுக்கு உயரிய கருத்தினாலும் கருத்தைக் குறிக்கும் பெயரினாலும் கிட்டும் அளவுக்கு வேறெந்த உபாயத்தினாலும் அமைதி கிடைப்பதில்லை. இதனால் ராம ஜபம் பெருமை மிக்கதென்று கூறப்பட்டிருக்கிறது. ராம ஜபத்தினால் உள்ளம் சுளுவாக மாற்றம் எய்துகிறது.

இதெல்லாம் கருத்தைக் கருதுவதின் விளைவாகும். அதனுல் வழி விளக்கமும் உண்டாகிறது. மகாத்மாக்கள் உயிர் வாழ்ந்த காலத்தில் அவர்களால் சாதிக்க இயலாதவை யெல்லாம் அவர்கள் காலம் சென்ற பிறகு அவர்களின் பெயர்கள் சாதித்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஏனெனில் நிசர்சனமான உருவம் அழிந்துவிடவே அத்துடன் அதன் குறைபாடுகளும் மறைந்து பட்டன. தூய தெய்வ அம்சமே எஞ்சி நின்றது. ஆனுல் நம்மை அவா வொன்றுபாதிக்கிறது. அதற்கு என்ன பெயரளிக்கலாம்? காட்சியவா எனலாம் அதை. அதனுல், உருவம் அழிந்த உடனே ஒருகண நேரம் நமக்கு எங்கும் இருள் சூழ்ந்து விட்டதுபோல் தோன்றுகிறது. ஆனுல் ஒளியொன்றும் மங்குவதில்லை. நாம் கரும் பலகையில் எழுத்தை வரைகிறோம். பிறகு அழித்து விடுகிறோம். ஆயினும் அவைகளின் பொருள் அழிவதில்லை என்பதை நாம் அறிவோம். அவ்வாறே ஒரு மனிதன் மூலமாக கருத்தொன்று வெளியானுல், அவன் மறைந்துவிடும்பொழுது அதுவும் அழிந்து விடுவதில்லை; கருத்தின் ஒளி மேலும் தெளிவுற்றே விளங்குகிறது.

பாபுவின் ஆயுட்காலத்தில் அவரது கருத்துக்களில் நாம் பற்றுக்கொண டிருந்தோம். அது இந்த சம்பவத்தினுல் குறையப் போவதில்லை; அதற்கு மாருக நமது பற்றில் இருந்த குறைபாடுகளும், சந்தேகங்களும் நீங்கப் போகின்றன. ஒருக்கால் இதனுலேயே இத்தகைய நிகழ்ச்சிகள் கடவுளின் திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன போலும். 'ஒருக் கால்' என்று நான் சந்தேக

மாகக் கூறியது கடவுளின் உள்ளம் நமக்கு திட்டமாகத் தெரியாமையாலாகும். அது நமது அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டது. ஆகவே நாம் அதைப் பற்றிய ஆலோசனையில் புகுதல் ஆகாது. இம்மாதிரியான நிகழ்ச்சிகளினால் நம் உள்ளத்திற்கு எத்தகைய பலம் கிட்டுமென்பதையே சிந்திக்கவேண்டும். அவ்வாறு எண்ணிப் பார்க்கையில் மிகுந்த பலம் எய்துகிறோம். இன்று காலையில் நான் சிந்தனை புரிந்துகொண்டிருக்கையில் இக்கருத்து உதயமாயிற்று. அதையே துளசி தாசருடைய வாக்கின் பக்க பலத்துடன் உங்கள் முன் இட்டுவிட்டேன்.

(பிரார்த்தனைக் கூட்டம் : சாந்தி குடீரம், கோபுரி, நால்வாடி. 6—2—48)

8

காந்திஜிக்கு நினைவு சின்னங்கள் அமைப்பது பற்றி மக்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். காந்திஜியின் வாழ்க்கை மிக மிகப் பரந்தது. வாழ்க்கையின் பல கிளைகளுடன் அது தொடர்புற்றிருந்தது. ஆகவே வித விதமான நினைவு சின்னங்கள் ஏற்படும். நாட்டின் சார்பினும் பிரத்தியேகமான சின்னமொன்று அமைக்கப்படும். ஆனால் இந்த ஸ்தூல சின்னங்களினால் உண்மையான நினைவு நிலைபெற முடியாது. அந்த நினைவு சின்னங்களினால் முக்கியமான விஷயம் மறைந்துவிடாதிருக்க வேண்டுமே என்றும் நான் அஞ்சுகிறேன். அடிக்கடி இது நிகழ்வதுண்டு. அதாவது, விசேஷ சந்தர்ப்பங்களில் நம்முள் உணர்ச்சி அலைமோதி எழும். அந்த உணர்ச்சியை அடக்கவேண்டி மனிதன் புறச் செயல் ஏதேனும் புரியவே,

113673

அந்த ஆவேசமும் சிறிது சிறிதாக அடங்கிவிடும். துக்க உணர்ச்சி தோன்றிய உடனே ஆழ்ந்த உள்ளம் படைத்த மனிதன் அந்த உணர்ச்சியை உள்ளேயே மறைத்து அதனால் தன் ஆற்றலைப் பெருக்கிக் கொள்கிறான். உள்ளத்தில் ஆழமில்லையானால் அந்த துக்கம் புலம்பலாக வும் கண்ணீராகவும் வெளிப்படவே மனம் அமைதியுற்று விடுகிறது. இவ்வாறே மரியாதை உணர்ச்சி மேலிடும் பொழுது அதை புறத்தே வெளியிட்டபின் அமைதி யடைந்துவிடுவதுண்டு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இரவு முழுமையும் விழித்திருந்து பஜனை செய்வோரை நான் பார்த்திருக்கிறேன். பஜனைக்கு ஒருவகை மனோவேகம் உண்டு. ஆனால் அதனால் வாழ்வில் ஏதும் மாறுபாடு உண்டாவதாய்த் தெரியவில்லை. நல்லுணர்ச்சியின் அம்சம் அதில் இருந்த போதிலும், அது வெறும் உணர்ச்சியாகவே இருந்துவிடுகிறது; பஜனையினால் அவ்வுணர்ச்சி ஓரளவு அடங்குகிறது.

ஆனால் நாம் அவ்வாறு நடைபெற விடலாகாது; நாம் ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கம் செய்துகொள்ள வேண்டும். வாழ்க்கையே மாற வேண்டும். நமது வாழ்க்கை பாபமயமானதென்ற உணர்ச்சி நமக்கு உண்டாக வேண்டும். பாபமில்லையேல், இந்த நிகழ்ச்சி நிகழ்ந்திராது. "காந்திஜியைப் போன்ற பெரிய புனித ரைக் கொலை செய்ய அப்பாதகன் கையும் எப்படி எழுந்ததோ?" என்று ஒரு நண்பர் என்னைக் கேட்டார். இது சிந்திக்க வேண்டிய விஷயம். நான், "காந்திஜி ஒரு தனி மனிதரா? அவர் நமது சுமைகளையல்லவோ சுமந்து

கொண்டிருந்தார். நமது வாழ்க்கையில் கறை படிந்திருக்கிற தாகையால் இக்கொலை நிகழ்ந்தது. அவர் தனி மனிதரா யிருந்து, நம் பொறுப்பையெல்லாம் ஏற்காதிருந்தால் விஷயம் வேறு யிருந்திருக்கும்" என்றேன். அவர் நமது பொறுப்பையெல்லாம் தாங்கி, இறுதிவரையில் அதற்கேற்ப நடந்துவந்ததால் இக்கொலையின் பொறுப்பு நம்மையே சாரும். இதை யுணர்ந்து நம்முள் உள்ள கருத்துப் பிழைகளை அகற்றி வாழ்க்கையையே அதையொட்டி மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் எவ்வளவுதான் பொருத்தமுள்ள புறச் சின்னங்கள் அமைத்தபோதிலும், எதற்கு நாம் சித்தமாக வேண்டுமோ அது அவைகளினால் நிறைவேறாது. இவ்வாறு ஆயத்தமாகாத வரையில் இந்த நிகழ்ச்சிக்குரிய பரிஹாரமும் செய்தவர்களாக மாட்டோம்.

(பிரார்த்தனைக் கூட்டம்: கோபுரி, நால்வாடி. 7—2—48.)

9

நேற்று நான் நினைவு சின்னங்களைப் பற்றிக் கூறும் பொழுது வெளிச் சின்னங்கள் அமைக்கும் உற்சாகத்தில் உள்ளே யுள்ள பொருளை நாம் மறந்து விடலாகா தென்று சொன்னேன். ஆயினும் வெளிச் சின்னங்கள் ஏற்படத் தான் செய்யும். அவைகளையும் விவேகத்துடன் அமைக்க வேண்டும். இத்தகைய சின்னங்கள் எவ்வாறு இருக்க வேண்டு மென்பதைக் குறிப்பிடும் கடிதங்கள் சில எனக்கு வந்திருக்கின்றன. ஒரு ஆலோசனையோ, கூடிய வரையில் கிராமத்திற்கு ஒரு காந்திக் கோயிலாவது எழுப்ப வேண்டு மென்பது. அதில் காந்திஜி, கஸ்தூரிபாய் ஆகி

யோரின் சிலைகள் மட்டும் இருக்க வேண்டுமாம். இந்த ஆலோசனையைக் கூறியவரின் பக்தியை நான் மதித்த போதிலும், இம்மாதிரியான காரியத்தை நான் ஆபத்தான தென்று கருதுகிறேன் என்று சொல்லியாக வேண்டும். இன்று இந்தியாவில் வாழும் சில மனிதர்களை அவர்களுடைய சீடர்கள் அவதாரங்களெனக் கருதுகிறார்கள். நாம் காந்திஜியிடம் இம்மாதிரியான மூடபக்தி காட்டலாகாது. அவன் ஒரு மனிதர்; மனிதராகவேதான் அவர் வாழ்ந்தார். அவரை அப்படியே இருக்க விடுவதில் நமக்கு நன்மையுண்டு. இதனால் ஒரு மேலோரின் உருவம் நம் முன் இருக்கும்; நீதியின் எல்லையொன்று நமக்குக் கிட்டும். இவை இன்று உலகிற்கு மிகவும் தேவை. இதற்கு மாறாக நாம் அவரை தேவராக்கி விடுவோமானால், அதனால் தேவர்களுக்கு நன்மை எதுவும் ஏற்படாதது நிற்க, மனிதத் தன்மையின் ஒரு சிறந்த உதாரணத்தையும் இழந்தவர்களாவோம். பக்தி யுணர்ச்சிக்குத் தேவையான சாதனங்களெல்லாம் ஏற்கெனவே நம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. அதற்கு புதிய தேவதை எதுவும் தேவை யில்லை. வாழ்வைப் புனித மாக்கும் வழியைக் காட்டக் கூடிய புனிதமான உதாரண மொன்றே தேவை. நீதியை வற்புறுத்துவதில் புதிய உதாரணங்களைப் போல் பழையவை ஆற்றல் பெற்றிருப்பதில்லை. அத்தகைய உதாரண மொன்று நமக்கு பாபுவின் உருவில் கிடைத்திருக்கிறது. அவரை தேவராக்குவதனால் நாம் அதை இழந்து விடுவோம். அதற்கு பிரதியாக வேறு பயனும் கிட்டாது. முன்னரே உள்ள பல சம்பிரதாயங்களுடன் இன்னு மொன்றைக் கூட்டுவோம்;

அதனல் என்ன பயன்? எந்த ராமன் பெயரைச் சொல்லிக் கொண்டே அவர் உடலை நீத்தாரோ அவனிடம் நாமும் பக்தி புரிதலே சிறந்தது. அவன் பெயரையே பாடுவோம். ராமனும் தசரதனின் புத்திரனை யல்ல; எவன் பெயரை தசரதன் தன் மகனுக்கு இட்டிருந்தானே அவனிடம். அதாவது அந்தர்யாமியான ஆத்மாராமனிடம். ஆண்டவனின் குணங்கள் அனந்தம். அக்குணங்களைக் கருதி நாம் பல பெயர்களை ஜபிக்கலாம். ஆனல் எந்த மனிதனின் பெயரையும் கடவுளுடன் சேர்த்தலாகாது. கடந்த காலத்தில் சம்பிரதாயங்களின் பெயரால் நடந்த சண்டைகளைப் போல, இதன் மூலமாக நாம் வருங்காலத்தில் சண்டைக்கு ஏற்பாடு செய்கிறோமோ என்ற அச்சமும் எனக்குண்டாகிறது. ஆகையால் பணிவுடன் காந்திஜியின் மனிதத் தன்மையை மதிக்கும் முகத்தான் அவருடைய குணங்களைப் பின் பற்றுவோம். முடிந்தால் அவைகளைப் பெருக்குவோம்; விக்ரகங்களைப் பெருக்க வேண்டாம்.

(பிரார்த்தனைக் கூட்டம்: கோபுரி, நால்வாடி. 8—2—48)

10

காந்திஜியின் பலி எல்லா மதங்களையும் தூய்மைப் படுத்தி அவைகளிடையே ஒற்றுமையை நிறுவும் பொருட்டு நிகழ்ந்தது. இந்தியாவில் பண்டைக்காலந் தொட்டே பல் வேறு சமயங்கள், கருத்துக்கள் ஆகியவற்றினிடையே இணக்கம் ஏற்பட்டு வந்திருக்கிறது. ஹிந்துக்களும் முஸல்மான்களும் சேர்ந்து வாழ நேர்ந்தகாலத்திலிருந்தே, இருவரையும் இணைக்கும் பொருட்டு கபீர், நானக் முதலிய மகான்கள்

முயன்றிருக்கிறார்கள். 'ராமனும் ரஹீமும், கிருஷ்ணனும் கரீமும் ஒருவரே' என்பது அவர்களுடைய வாக்கே. ஆனால் சமீபகாலத்தில், முக்கியமாக அரசியல் காரணங்களினால் ஹிந்து-முஸல்மான்களிடையே வேற்றுமையை உண்டாக்கி வளர்த்து விட்டார்கள். ஆகவே "ईश्वर अल्ला तेरे नाम" (ஈச்வரன், அல்லா என்பவை உன் திரு நாமங்களே) என்ற கோஷத்தை காந்திஜி மீண்டும் எழுப்பினார். அதன் பயனே அவர் உடலை நீத்தது. இடையில் வேறுபாடுகள் பெருக்கப் பட்டது எத்தனையோ வகைகளிலாகும். இல்லையேல் கருத் திணக்கம் ஏற்பட்டு மக்கள் நேசமாகவே வாழ்ந்து வந்தனர். மக்கள் ஒருவர் மற்றவர்களின் திருவிழாக்களில் கலந்து கொள்ள, இரு சமூகங்களும் ஒன்றாகி வந்தன. இப் பொழுதோ வேற்றுமைகளைப் பரப்பி வந்ததின் காரண மாக இருவர் உள்ளங்களிலும் தவறான எண்ணங்கள் மிகவும் வளர்ந்து விட்டன. அவை நீங்கும், நீங்கியாக வேண்டும். அதைப் புரியும் ஆற்றல் "ईश्वर अल्ला तेरे नाम" என்ற மந்திரத்திற்கு உண்டு. படிக்க முடிந்தவர்கள் ஒருவர் மற்றவரின் மதத்தை ஆராய, இணக்கம் பூர்த்தி யாகும். சில வருஷங்களுக்கு முன் எனக்கு குரானைப் பயில வேண்டுமென்று தோன்றிற்று. நான் அதற்கு முன்னரே குரானின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித் திருந்தேன். ஆனால் திருப்தியுண்டாகவில்லை. ஏனெனில் அராபி, ஆங்கிலம் ஆகிய இரண்டின் அமைப்பிலும், சொல் அமைப்பிலும் பெருத்த வேறுபாடுண்டு. ஆகவே அராபி மூலத்திலேயே குரானைப் படிக்க நினைத்தேன். எனது

சுதேசி தர்மம் என்னை பவனார்*லிருந்து வெளியேற அனுமதிக்கவில்லை. ஆகவே அங்கே இருந்தவாறே ஆனவரையில் படித்தேன். நான் குரானின் சொற்களின் மூலப் பகுதிகளை ஆராய முயன்றேன். இந்தப் பாடுகளின் பயனாக முன்னரே கெட்டிருந்த என் கண்கள் பாழாயின. ஆனால் எனக்கு பெருத்த மனவமைதி உண்டாயிற்று. எல்லா மதங்களும் ஒன்றே என்ற நம்பிக்கை ஏற்கெனவே இருந்ததுண்டு; ஏனெனில் மனித உள்ளம் ஒன்றே. மேலும், மதங்களை அமைப்போர் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள். இந்தப் படிப்பினால் அந்த நம்பிக்கையை நேரிடையாக அனுபவிக்க முடிந்தது. நான் படித்துக் கொண்டிருந்த காலையில் நல்லுணர்ச்சியுள்ள வித்வான் ஒருவர், "நீங்கள் குரான் படிக்கிறீர்களே, அதில் அஹிம்சை முதலிய தத்துவங்கள் காணப்படுகின்றனவா?" என்று எனக்கு எழுதிக் கேட்டார். அதாவது, இத்தகைய விஷயங்கள் குரானில் இருக்குமானால் அது ஆச்சரியத்திற்குரியதாகும் என்பது கருத்து! குரானைப் படித்ததிலிருந்து—எல்லா தர்மங்களும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியே—இஸ்லாமும் மிகவும் சகிப்புத்தன்மை கொண்ட மதமென்பது விளங்கிற்று. ஏனெனில் குரானே கூறுவது போல, சத்தியத்தைப் பரப்புவதில் நிர்ப்பந்தத்திற்கே இடமிருப்பதற்கில்லை. குரானில் நான் மற்றொரு வேற்றுமையையும் கண்டேன். உலகின் 'தீன்' அல்லது தர்மம் ஒன்றே;

---

* இது வர்த்தாவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமம். இங்கே தான் ஆசார்ய வினோபா பல வருஷங்களாகத் தங்கி தம் சீடர்களுடன் கிராமஸேவை புரிந்து வருகிறார்.

சமயங்கள் வெவ்வேறுள்ளன. 'தீன்' என்றால் சத்திய வழி செல்லலாகும். இந்த சத்தியத்தை நோக்கி நடப்பதற்குரிய வழிகளே சமயங்கள். அவை பல; வெவ்வேறானவை. மேலும், "நீங்கள் அனைவரும் ஒரே 'உம்மத்' (குடும்பம்) அல்லது 'ஜமாத்' (குழுவினர்); பழக்க வழக்கங்களில் உள்ள வேறுபாடுகளினாலேயே வேற்றுமைகள் எழுந்திருக்கின்றன. அவைகளுக்கு மதிப்பு ஏதுமில்லை," என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தின் சாரம் அடங்கியுள்ள குரானின் சிறு அதிகாரமொன்றை உங்களுக்குக் கூறி விட்டேன். அதில் பைகம்பர் கூறுவது என்னவென்றால், "மேற்றிசையில் மறையவிருக்கும் சூரியனை சாட்சியாகக் கொண்டு நான் கூறும் உறுதி மொழி இது: 'இந்த சூரியன் மறைய விருப்பது போலவே மனிதவாழ்வும் அழியும் தன்மையது. தம் வாழ்வு நிலைத்ததென்று கருதுவோரெல்லாம் நஷ்டமடைவோரே. கடவுளை நம்பி, நல்ல செயல்கள் புரிந்து கொண்டு, 'ஹக்' அல்லது உண்மைவழி நடக்கவும் 'ஸப்ர' அல்லது அமைதியை அனுசரிக்கவும் ஒருவர் மற்றவருக்கு போதித்துக் கொண்டிருப்பவரே நஷ்டமடையார்.'" குரானில் கடவுளை நம்பவேண்டுமென்று கூறப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் நற்பணிகள் புரிவதும் அதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்தே ஒரு பொருளாகிறது. ஒன்று அகத்தையும், மற்றது புறத்தையும் பற்றியது. 'ஹக்'கும் 'ஸப்ர'மும், அதாவது உண்மையும் அன்புமே, சுருங்கக் கூறினால், இஸ்லாமாகும். இதுவே ஹிந்து மதம், இதுவே கிறிஸ்தவ மதம்; மதங்களனைத்தும இதுவே. ஆகவே ईश्वर अल्ला तेरे नाम" என்ற

இச் சிறு மந்திரம் எல்லா மதங்களையும் புனிதப்படுத்தி இணைக்கும் மந்திரமாகும். அதன் உதவி கொண்டு நாம் உண்மையில் உறுதியையும் அன்பில் ஆர்வத்தையும் வளர்ப்போமானால், இந்த பலியினால் ஒரு புதிய யுகமே தொடங்கக் கூடும்.

(பிரார்த்தனைக் கூட்டம் : கோபுரி, நால்வாடி. 9—2—48)

11

பாபுவைக்குறித்து வெளிவந்துள்ள அனுதாபச் செய்திகளைப் பார்க்கும்பொழுது ஒரு விஷயம் முககியமாகத் தெரிகிறது : அதாவது உலகின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம், பல்வகைக் கருத்துள்ளவர்களும் தம் துக்கத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுள் பலர் நன்கு அமைந்த அரசாங்கங்களை தலைமை வகித்து நடத்துவோர்; ஹிம்சையின் உதவிகொண்டு ஆட்சிபுரிவோர். சிலரோ ஆழ்ந்து ஆலோசிக்கும் இயல்புள்ள சிந்தனை சீலர்கள். அனைவருமே பாபுவின் போதனைகள் உலகிற்கு இன்றியமையாதவை யென்று நினைக்கிறார்கள். இதிலிருந்து, இன்று உலகிலுள்ள சிந்தனைசீலர் அனைவருக்குமே ஹிம்சையிடம் அலுப்பேற்பட்டுவிட்டது, அதிலிருந்து விடுபடுவதற்குரிய வழி புலனாகவில்லை என்று தெரிகிறது. ஆனால் உலகின்முன் காந்திஜி இட்டுள்ள சமுதாய—அஹிம்சைக் கருத்துக்களை எப்பொழுதேனும் எந்த வகையிலேனும் அனுசரித்தாலல்லது தப்ப வழியில்லை என்றும், அதற்கு வேண்டிய ஆற்றல் எவ்வளவு விரைவில் கிட்டுகிறதோ அவ்வளவுக்கு நலமென்றும் அனைவரும் கூறியிருக்

கிறார்கள். இந்திய மக்களுக்கு அதன் மதிப்பின் உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. ஏனெனில் 150 வருஷங்களாக மக்கள் பலவந்தமாக நிராயுதராக்கப்பட் டிருந்தார்கள்; அதனால் ஒருக்கால் ஆயுதங்களில் மக்களுக்கு அதிக நம்பிக்கை யேற்பட்டு, அவைகளின் மதிப்பு வளர்ந்துவிட்டது போலும். நம்மிடமில்லாத பொருளுக்கு நாம் அதிக மதிப்பளிப்பது இயற்கையே. சமுதாய முறையில் அஹிம்சையை அனுசரிப்பது எப்படி என்பதைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான மனோபலமும், கற்பனைசக்தியும், ஆண்மையும் நம்மிடம் போதிய அளவு இருக்கவில்லை. ஆயினும் இந்திய நாகரீகத்தையும் கலாசாரத்தையும் கருதுகையில், இந்தியாவே இதை முதலில் ஏற்குமென்று எதிர்பார்க்கலாம்; காந்திஜியின் நம்பிக்கையும் இதுவே. 25, 30 வருஷங்களாக இங்கே இது அரைகுறையாகவேனும் அனுசரிக்கப்பட்டிருப்பதால் ஒரு சிலரின் உள்ளங்களிலேனும் சிறிது நம்பிக்கை தோன்றியிருக்கிறது. உலகிற்கோ ஒன்றும் விளங்கவில்லை. அது சிக்கலில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கிலையில் இந்த முக்கியமான கருத்தை நாம் எந்த அளவுக்கு ஏற்க இயலுமென்றும், இதற்கெனச் செய்ய வேண்டியவைகளை நம்மால் எந்த அளவுக்கு சாதிக்க முடியுமென்றும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். எழும் சந்தேகங்களை அலசி ஆராய்ந்து போக்கவேண்டும். இவ்வாறு ஒரு சிலரேனும் தம் கருத்தில் உறுதியுடனிருப்பார்களானல் இக்கருத்தை விதைத்தவராவோம். அதிலிருந்து பின்னர் மரம் வளர்ந்து தழைக்கும். இதை நம்மிடமின்றேல் வேறு யாரிடம் எதிர் பார்ப்பது? நமக்கே இதில் சந்தேக முண்

டானல், வேறு எவரிடத்திலும் எதையும் எதிர்பார்ப்பதற் கில்லே. இது பற்றி நான் சிந்திக்குங்கால் மற்ற எல்லாத் திட்டங்களும், ஏற்பாடுகளும், வேலேகளுமே சாரமற்றவை யாகத் தோன்றுகின்றன. அஹிம்சைச் சோதனேயும் ஆத்ம சக்தியைக் காண்பதுமே மிகமிக முக்கியமானவை யென்று தோன்றுகிறது.

(பிரார்த்தனேக் கூட்டம் : கோபுரி, நால்வாடி. 10—2—48)

12

என் சகோதரிகளே, சகோதரர்களே!

இன்று ஜம்னுலால்ஜியின் ஏழாவது புண்யதினம். காந்திஜி காலமாகி இன்று பதிமூன்று நாட்கள் ஆகின்றன. இப்பொருத்த மொன்று நம்பிக்கையுள்ள மனிதனுக்குத் தோன்றும். ஜம்னுலால்ஜியை கடைசி முறை பார்க்கும் பொருட்டு இதே கிழமையில் இதே நேரத்திற்கு காந்திஜி இங்கு வந்தார் என்று ஜானகி தேவிஜி நினேவுறுத்தினர். அவ்வாறே காந்திஜியின் உடலின் ரட்சை * இன்று ஸேவா கிராமத்திலிருந்து இங்கு வந்திருக்கிறது. கருத்து என்னவெனில், அந்த இரு மகா புருஷர்களின் வாழ்க்கை களும் வேறுபாடின்றி ஒன்றிவிட்டன. இன்றைய இந்தப் பொருத்தத்தைப் பார்க்கும் பொழுது அதை ருஜூப் படுத்தவே தேவையில்லே எனலாம்; அவர்களுடைய வாழ்க்கைகளே இதைத் தெரிவிக்கின்றன.

காந்திஜி இங்கே, வர்த்தாவில் 15 ஆண்டுகள் வசித்

* மகாத்மாஜியின் அஸ்திக்கு இங்கே ரட்சை யென்ற மரியாதையைக் குறிக்கும் பெயர் அளிக்கப்பட்டிருக்கிறது.

தார். அவரை இங்கு அழைத்து வந்த பெருமை ஜம்னு லால்ஜியையே சாரும். எங்கெங்கிருக்தெல்லாம் எந்தெந்தப் புனித வஸ்துக்களைக் கொணரமுடியுமோ அவைகளை யெல்லாம் ஜம்னுலால்ஜி கொணர்ந்தார். அவர் பகீரதனைப் போல் இங்கே கங்கையைக் கொணர்ந்து வர்த்தாவை ஒரு புண்ணியஸ்தலமாக்கினர். இங்கே காணப்படும் ஸ்தாபனங்கள் அனைத்தும் அவர் அமைத்தவை. காந்திஜி கருத்துக்களை வெளியிடுவது, ஜம்னுலால்ஜி அவைகளை அமுலுக்குக் கொண்டுவருவது என்ற உறவு அவர்களிடையே இருந்து வந்தது. இன்று ஜம்னுலால்ஜியின் எழுத்துக்கள் சிலவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒன்றில் அவர் எழுதியிருப்பதாவது: "காந்திஜியைப் போன்ற சிறந்த வழிகாட்டி நமக்குக் கிடைத்திருக்கிருர். அவர் காட்டும் வழியில் பயன் கருதாது மக்கள்—பணி புரிவோமானல் இந்த ஜன்மத்திலேயே மோட்ச மெய்தலாம். இந்த ஜன்மத்தில் மோட்சம் கிட்டாவிட்டாலும் கவலைப்பட வேண்டிய தில்லை. சேவை புரிவதற்கென்றே ஜன்மங்கள் பல எடுப்பதிலும் ஆனந்தமே உண்டு. அறிவு தூய்மையுடனிருந்தால் போதும்." தம் தினக்குறிப்பில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிருர்.

அவர் வர்த்தாவுக்கு எவ்வளவு அன்புடன் பணி புரிந்தார்! சுதேசி தர்மத்தை நிறைவேற்றும் பொருட்டே அவர் வர்த்தாவை நேசித்தார். துளசிராமாயணத்திலிருந்து இன்று படிக்கப்பட்ட பரத சரித்திரம் அவருக்கு மிகவும் பிடித்ததாகும். காந்திஜிக்கும் அது வெகு பிரியமானதே. நமது நாடு 'பாரத வர்ஷ' மென்று அழைக்கப் பெறுவதற்

கும் பரதன் பெயருக்கும் சம்பந்தமுண்டு. ராமனருகில் இருக்க இயலவில்லை யாயினும் பரதன் ராமன் பெயரைச் சொல்லிக்கொண்டே ராமன் பணியைச் செய்துவந்தான். 'இது ராமனுடைய ராஜ்யம்' என்ற கருத்துடன் அவன் அதன் ஆட்சியை நடத்திவந்தான். கவி வர்ணிக்கிறார்: "ராமர் வனம் சென்றார். தவம் புரிந்து இளைத்தார். பரதர் அயோத்தியில் இருந்தவாறே தவமாற்றி இளைத்தார். ஒருவருடைய தவம் காட்டில் நடந்தது; மற்றவருடையது நிகழ்ந்ததோ நகரில். ராமர் வனவாசம் முடிந்ததும் அயோத்திக்குத் திரும்பினார். பரதரை சந்தித்தார். அப்பொழுது காட்டிலிருந்து வந்தவர் எவர், நகரில் இருந்துவந்தவர் எவர் என்பதே புரியவில்லை." இத்தகைய பரத சரித்திரத்தை அவர்கள் இருவரும் சிறந்த முன் மாதிரியாகக் கொண்டிருந்தனர். இப்பொழுதோ ஜம்னலால்ஜி சென்றார், காந்திஜியும் போய்விட்டார். அவர்கள் இடையறாது ஊழியம் புரிந்த வர்த்தாவைச் சேர்ந்த நாங்களும், மகாஜனங்களாகிய நீங்களுமாகச் சேர்ந்து அவர்கள் சென்ற பிறகு அவர்களுடைய புண்ய தினத்தைக் கொண்டாடுகிறோம். இதனால் நாம் அவர்களுக்குச் செய்வது ஒன்றுமில்லை. அவர்கள் தம் சிறந்த காரியங்களின் பயனாகவே உத்தம கதியை எய்திவிட்டார்கள். நமது உள்ளத்தூய்மையின் பொருட்டே நாம் இதையெல்லாம் செய்கிறோம்.

ஜம்னலால்ஜி, காந்திஜி ஆகிய இருவருமே ஜாதி, மதம் என்ற வேற்றுமை எதையும் பாராமல், மனிதரனைவரும் ஒன்றே என்ற மனப்பான்மையுடன் ஊழியம் புரிந்தனர்; ஏழை எளியவருடன் ஒன்றி வாழவேண்டி இடையறா

முயற்சி செய்தனர். "परहित बस जिनके मन मांही, तिन कहं जग दुर्लभ कुछ नाहीं" (எவருடைய உள்ளத்தில் பிறரின் நன்மை இடம்பெற்றிருக்கிறதோ அவருக்கு உலகில் அரியதொன்றுமில்லை) என்ற துளசிதாசரின் வாக்கின்படி பிறரின் நன்மையையே வாழ்வின் நோக்கமாகக் கொண்டு அவர்கள் உலகில் அனைத்தையும் நிறைவேற்றினார்கள். இத்தகைய இவ்விரு மகான்களும் நம்முன் வாழ்ந்தார்கள்.

நாம் நம் நலனை கவனிப்போம் என்று சாதாரண மனிதன் எண்ணுகிறான். ஆனால் கவனிக்கப்போகும் நலன்தான் என்ன? ஒரு நாள் உடலைக் களைந்துவிட்டுச் செல்ல வேண்டுமென்றால், அதை சந்தனக் கட்டையைத் தேய்ப்பதைப் போல் உலகத்தின் ஊழியத்தில் தேய்க்கலாமே. சந்தனத்தைத் தேய்க்காத வரையில் அதன் மணம் தெரிவதில்லை. சந்தனத்தைத் தேய்க்காதிருந்தால் மணம் எவ்வாறு கிளம்பும்? அப்பொழுது சந்தனக் கட்டைக்கும், மற்றக் கட்டைகளுக்கும் வேற்றுமை ஏது? நாம் ஊழியம் புரியவில்லையானால் மனிதராய்ப் பிறந்து நாம் சாதித்தது தான் என்ன? உண்பதும் உறங்குவதுமாகவே நாட்களைக் கழித்தோமென்றால், மிருகங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் என்ன? மகாபுருஷர்களின் பெயர்களை நாம் சொல்லுவது எதற்கு, அவர்கள் தம் உடலை மறந்து அகில உலகின் நலனைக் கருதினார்கள் என்பதனாலல்லவா? ஒவ்வொரு நாளும் உறங்கப் போகுமுன் நான் இன்று என் உடலுக்காக எத்தனையோ காரியங்கள் செய்தேனே, உலகத்திற்கு என்ன செய்தேன், என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த நோயாளிக்கேனும் சேவை செய்தேனா?

எங்கேனும் அசுத்தத்தைப் போக்கினேனு? எவனுடைய அழுத கண்ணீரையேனும் துடைத்தேனு? எவனுக்கேனும் கைகொடுத்தேனு? இவ்வகையில் சிறுபிள்ளைகளும், முதியோரும், வாலிபரும், ஆண், பெண் அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாள் முழுமையும் பரோபகாரம் ஏதும் செய்திராவிட்டால், அந்நாள் வீணனதாகக் கருதி, ஏதேனும் உதவி புரிந்த பிறகே உறங்கவேண்டும்.

நான் உங்களை வேண்டுவது நீங்கள் தம் ஆயுளைப் பிறர் உதவியிலேயே செலவு செய்யுங்கள். 'இவன் இறந்து போனுன்; ஆனல் நமக்குழைத்தே இறந்தான்' என்று பிறர் சொல்லும்படி வாழுங்கள், என்பதே.

(பிரார்த்தனைக் கூட்டம், கோபுரி)
(பூஜ்ய ஜம்னுலால்ஜியின் மரண தினம் 11—2—48)

13

என் சகோதர சகோதரிகளே!

ஒரு புனித ஆத்மா பரமாத்மாவுடன் கலந்து விட்டது; அவருடைய உடலில் இறுதியாக எஞ்சியிருந்ததும் இன்று இயற்கையில் சேர்ந்துவிட்டது.

உடல் மரிப்பதால் ஆத்மா அழிவதில்லை என்பதற்கு இன்று உங்கள் மனமும் என் மனமும் சாட்சி பகர்கின்றன. எந்தக் கருத்துக்கள் காந்திஜியின் உள்ளத்தில் இருந்தனவோ, எவைகள், உடல் வகுத்திருந்த வரம்பு காரணமாக ஓரளவுக்கே பரவ முடிந்ததோ அவை இப்பொழுது உமது எனது ஆகிய எல்லா உள்ளங்களிலும் புகுந்து விட்டன. இனி அவைகளை யொட்டி நடக்க முயலுவோமாக.

ஹிந்து, முஸல்மான், சீக்கிய, பார்சி, கிறிஸ்தவர், யஹூதி என்ற பல்வேறு மதத்தினரும் நமது சகோதர சகோதரிகளாவர். இது நமக்குள்ள பேரதிர்ஷ்டமே. இதை உணர்ந்து நாம் எல்லா வேற்றுமைகளையும் மறந்து அன்புடன் ஒன்று சேருவோமாக. ஹரிஜன், பரிஜன் (ஜாதி ஹிந்து) என்ற கெட்டவேற்றுமையை ஒழிப்போம்; அனைவருமே ஹரிஜனங்களாவோம்; நம் கையால் நூற்ற நூலைக்கொண்டு ஆக்கிய துணியால் நம் உடலை மூடுவோம்; கிராமங்களை கண்ணாடியைப்போல் சுத்தமாக வைத்திருப்போம்; எல்லாத் துர்ப்பழக்கங்களையும் விட்டு சத்தியத்தையும் அஹிம்சையையும் விரதமாக ஏற்போம். இந்த உறுதி நிறைவேறுவதற்கு வேண்டிய பலத்தை அருளுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்.

(பரந்தாம், பவனரிலுள்ள தாம் நதியின் பஞ்சதாரையில்
பூஜ்ய காந்திஜியின் ரட்சையைக் கரைக்கும்பொழுது பேசியது.
பகல், உச்சி வேளை, 12—2—48)

14

இன்று தாம் நதிக்கரையில் நான்கண்ட காட்சி புனர் ஜன்மக் காட்சியேயாகும். நான் 'ஈசாவாஸ்ய'த்தைச் சொல்லிக் கொண்டிருக்கையில் எனக்குண்டான அனுபவத்தை சொல்லால் விவரிக்க இயலாது. ஞானிகள் ஆத்மாவின் பரந்த தன்மையைப் பற்றி போதிக்கிறார்கள். அது நம்பிக்கையாலும் உறுதி பெறுகிறது. ஆனால் இன்று அனைவருமே அதை உணர்ந்தனர். இறுதியில் நான் கூறிய அந்த உறுதி மொழிகள் பிறருக்கு அளித்த உபதேசமல்ல, என் உறுதியை வெளியிடுபவையே. காகா

ஸாஹேப்* அந்த ரட்சைக் கலசத்தை அவ்விடத்தே வைத்து அதை பக்தியுடன் பணிந்தார். அப்பொழுது என் கண்முன் நின்றது அக்கலசமல்ல ; அவ் வணக்கம் காட்டிய மனப் பாங்கே. பலவாண்டுகளாகச் சேர்ந்து பணி புரிந்து வந்த சகோதரர் அனைவரும் அங்கு ஒன்று கூடி ஒரு பூத உடலின் எஞ்சிய பகுதியைக் கரைத்தோம். அந்தச் சடங்குகளில் துக்கத்தின் அறிகுறியே தென்படவில்லை. ஆழ்ந்த உள்ளங்களுடன் நம் உறுதியை நிறைவேற்று வதற்கு வேண்டிய பலத்தைத் தந்தருளுமாறு ஆண்டவனை வேண்டினர். எல்லாம் முடிந்தபின், கிராம சகோதரர் சிலருடன் அவர்களின் கிராம வேலைகளைப் பற்றிச் சிந்திக்க எண்ணி அமர்ந்தோம். அப்பொழுது †கோடீ பாபா "இன்று மின்சாரம் பாய்ந்தது போல் ஆயிற்று. இனி ஒரு கணமும் வேலையில் தாமதம் கூடாது" என்றார். கிராமத்தவர் அவருடன் ஒத்த மனத்தவராகி அனுமதி யளித்தனர். இங்கே குழுமியுள்ள ஊழியர்களாகிய நாம் நம் வாழ்க்கையை மேன்மேலும் தூயதாக்கிக் கொண்டே கிராம சகோதரர்களின் பணியை ஊக்கத்துடன் செய்வோமானல் அவர்களும் நமக்கு சிறந்த உதவியளிப் பார்கள் என்று நம்புகிறேன். இன்று இக் கருத்து ஒன்றைத் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்கிறேன். இது பற்றிய திட்டத்தைப் பின்னர் வகுக்கலாம்.

(பிரார்த்தனைக் கூட்டம் : கோபுரி, நால்வாடி. 12—2—48)

---

* ஆசார்ய காகா கலேல்கர்.

† இவர் ஆசார்ய வினோபாவின் நெருங்கிய தோழர்களில் ஒரு முதியவர். காந்திஜி காட்டிய வழியிலிருந்து இம்மியும் வழுவாமல் நடக்க முயலும் பெரியார்.

2 4 A / 2-14

வினோபா பாவே

ஆசார்யரென்று மரியாதையாக அழைக்கப்படும் வினோபா பாவே மகாத்மா காந்தியுடன் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தவர்களுள் ஒருவர். அவர் மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவர். பிராமணர். இயற்கையிலேயே நுண்ணிய அறிவும், எளிமையில் பற்றும் கொண்ட அவர் கல்லூரியில் படித்து வந்தகாலத்தில் படிப்பை அறைகுறையாக விட்டுவிட்டு, சிறு பிராயத்திலேயே ஒரு சிறிது படித்திருந்த, ஸம்ஸ்கிருதத்தை தீவிரமாகப் படிக்கத் தொடங்கினார். இவ்வாறு சுமார் 10 வருஷங்கள் வடமொழிப் பயிற்சியிலேயே கழிந்தன. பிறகு ஹிமாலய பிரதேசங்களில் யாத்திரை செய்து கொண்டிருந்த சமயத்தில் மகாத்மா காந்தி 1916-ல் தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த செய்தி கேட்டு அவரைச் சந்தித்தார். அப்பொழுதே அவர்களிருவரிடையிலும் வெகு நாளைய பழக்கம்போன்ற நேசம் தோன்றிவிட்ட போதிலும் காந்திஜி வினோபாவை 1 வருஷத்திற்குப் பிறகு தம்மை மீண்டும் வந்து காணும்படி கூறி விடை கொடுத்தனுப்பினார். நாட்கள் பல சென்றன. மகாத்மாஜிக்கு தம்மை மகாராஷ்டிர வாலிபரொருவர் வந்து பார்த்ததும் அவரை தாம் 1 வருஷத்திற்குப் பின் வரச்சொன்னதும் இதற்கிடையில் மறந்து போயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் வினோபாஜி மீண்டும் அவரை வந்து கண்டபொழுது அவருக்கு ஒரு விஷயத்தைக் குறித்துப் பெருத்த வியப்பை உண்டாகிவிட்டது. சத்திய சீலரான மகாத்மாஜி 1 வருஷம் என்ற எல்லையைக் குறிப்பிட்டபொழுது "சுமார் ஒரு வருஷம்" என்றே கருதியிருக்கலாம். ஆனால் வினோபாஜி அதை 365 நாட்கள் கொண்ட, சிறிதும் ஏற்றமோ குறைவோ இல்லாத ஒரு வருஷம் என்று கொண்டார் என்பதையறிந்த மகாத்மாஜியின் ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. இச்சிறு செய்தியிலிருந்து வெளியான வினோபாஜியின் உண்மைப்பற்று மகாத்மாஜியை ஆட்கொண்டு விட்டதென்றே சொல்லலாம்.

அன்று முதல் மகாத்மாஜியின் அருகாமையில் வாழ்ந்த ஒரு சிலருள் இவருக்குத் தனிச்சிறப்புக் கிடைத்து விட்டது. மகாத்மாஜியை மிகவும் நெருங்கி வாழ்ந்த ஒவ்வொருவருக்கும்

ஒவ்வொரு விஷயத்தில் விசேஷமான யோக்யதை இருந்ததுண்டு. மகாத்மாஜி அவரவரை அவரவருக்குகந்த பணியில் புகுத்தி பயன் படுத்துவது வழக்கம். உதாரணமாக, ஸ்ரீ மஷ்ரூவாலா நல்ல படிப்பாளி; பெரிய சிந்தனு சீலர். ஸ்ரீ காகா கலேல்கர் வடமொழி முதலிய பல பாஷைப்பண்டிதரா யிருப்பதோடு போதனைக் கலையில் சிறந்து விளங்குபவர். விேனாபாஜியோ நல்ல படிப்பும், போதனுசக்தியும் பெற்றிருப்பதோடு மற்றெவ ரிடமும் அதே அளவுக்குக் காணப்படாததும் மகாத்மாஜியின் தனிச்செல்வமுமான மற்றொரு வஸ்துவும் பெற்றிருக்கிறார். அதை "தவம்" என்ற சொல்லால் அழைக்கலாம்.

விேனாபாஜியின் தபவலி ஒப்புவமை யற்றது. அவர் ஒரு அகண்ட பிரம்மசாரி. மகாத்மாஜிக்கு சாஸ்திர சம்பந்தமான சந்தேகங்கள் எழும்பொழுது அவர் விேனாபாஜி யைக் கேட்டே தம் சம்சயங்களைத் தீர்த்துக்கொள்வது வழக்கம். விேனாபாஜிக்கோ மகாத்மாஜி ஒரு ரிஷியைப் போன்றிருந்தார். மகாத்மாஜி அவ்வப்பொழுது வெளியிடும் புதுப்புதுக் கருத்துக் களையும், தத்துவங்களையும் ஆத்மானுபவம் என்ற உரை கல்லில் சோதித்தும் சம்பூர்ணமாக அனுஷ்டித்தும் முடிவுகள் கூறுதல் அவருடைய வேலையாக இருந்து வந்திருக்கிறது. காந்திஜியை தத்துவங்களை கண்டுபிடிக்கும் விஞ்ஞானியென்றால் விேனாபாஜியை அத்தத்துவங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் சோதனைச் சாலையென்று கூறுவது பொருந்தும்.

மகாத்மாஜிக்கு இவரிடமிருந்த நன்மதிப்பையும், நம்பிக்கை யையும் விளக்கும் இரு செய்திகளைக் குறிப்பிடலாம். (1) 1923-ல் ஸ்ரீ ஜம்னுலால் பஜாஜ் தம் சொந்த ஊரான வர்த்தாவில் சபர்மதியில் உள்ளது போன்ற ஆச்ரமம் ஒன்றை அமைக்க உதவ வேண்டி தமக்கு நம்பிக்கையான பெரியாரொருவரை அனுப்பும் படி வேண்டினார். அப்பொழுது காந்திஜி அனுப்பி வைத்தது ஸ்ரீ விேனாபாஜியையே. விேனாபாஜி ஸ்தாபித்த வர்த்தா ஆச்ரமமே 1931—32-க்குப் பிறகு காந்திஜிக்கும் இருப்பிடமா யிற்று. (2) மகாத்மாஜி பொதுஜன சத்தியாக்ரஹத்தை நிறுத்தி கடுமையான பல நிபந்தனைகளை நிறைவேற்றி வந்துள்ள ஒரு சிலரைக் கொண்டு தனி நபர் சத்தியாக்ரஹம் நடத்தத் தொடங்கிய காலத்தில் அவர் முதன் முதலில் தேர்ந்தெடுத்து அனுப்பியது விேனாபாஜியையே.

113673

வினோபாஜி தம்மை பெரிய எழுத்தாளரென்றோ பேச்சு வன்மை படைத்தவரென்றோ சொல்லிக் கொள்வதில்லை. ஆனால் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் காந்திஜியின் எழுத்திலும் பேச்சிலும் உள்ள உண்மையொளி காணப்படுவதோடு வித்வத்தைக் காட்டும் இலக்கியச் சுவை இனிது விளங்கு வதையும் காண்கிறோம். வேத உபநிஷத சாஸ்திரங்களும் மகாராஷ்டிர மகாத்மாக்களின் வாக்குகளும் இடையிடையே முத்து ஹாரத்தில் வைரமணி கோத்ததைப் போல் அவருடைய எழுத்துக்களில் விரவி வருவதைக் காணலாம். அவருடைய எழுத்துக்களை யெல்லாம் தொகுத்து வெளியிட்டால் பல பெரிய புஸ்தகங்களாக அமையும். அவர் எழுதியுள்ள நூற்றுக் கணக்கான கட்டுரைகள் நிற்க, அவருடைய "கீதாயி" என்று அழைக்கப்படும் கீதையின் மகாராஷ்டிர (செய்யுள்) மொழி பெயர்ப்பும், கீதையின் தத்துவங்களை விளக்கி அவர் செய்துள்ள உபந்யாசங்களும், மகாராஷ்டிர பாஷையின் அணிகலன்கள் என்பதில் சந்தேகமில்லை.

மேலே கூறியவற்றிலிருந்து வினோபாஜியை மகாத்மாஜி காட்டிய வழியில் தம் பகுத்தறிவைப் பயன் படுத்தாது போகும் 'அந்த பக்தர்' என்று கொண்டுவிடக் கூடாது. மகாத்மாஜி சூக்ஷ்ம ரூபமாகக் கண்டு வெளியிட்ட உண்மைகளை இவர் பூர்ண உருவில் உலகத்தாருக்கு வழங்கும் பெரும்பணி செய்து வந்தார் என்பதே உண்மை. கதர் விஷயத்தை எடுத்துக் கொள்வோமானால் தக்ளியை பிரசித்தப் படுத்தியவரும் பட்டை போடுவதை சுளுவாக்க வேண்டி "துனாயி" என்ற பன்னும் முறையை வழக்கிற்குக் கொண்டு வந்தவரும் நெசவிலுள்ள சிரமங்களைப் போக்க வேண்டி ஈரிழை முறுக்கை பிரசாரம் செய்தவரும் வினோபாஜியே.